**Name of Resource person:** Dr.Aishwarya.T

**Department:** Paediatrics

**Podcast Title:** Child Care: Misconceptions and Medical Facts- Pediatricians Perspective

**Category:** Public Education and Awareness

## TRANSCRIPT

ஹாய், ஹலோ மக்களே வணக்கம். இன்னைக்கு உங்ககிட்ட குழந்தை வளர்ப்பு பற்றி இருக்கிற தவறான நம்பிக்கைகள் பற்றியும், அதை எப்படி சரி பண்றது பத்தியும் பேச வந்திருக்கிறோம். நான் டாக்டர் ஐஸ்வர்யா, நான் டாக்டர் ஜானகி. இரண்டு பேரும் குழந்தைகள் நல மருத்துவர்கள், மனக்குளவ நாயகர் மருத்துவமனையில் பணிபுரிகிறோம். ஆரம்பிக்கலாமா? டெய்லி ஓபிக்கு ஒரு மதர் ஆச்சு வர்றாங்க, மேம். வந்துட்டு என்ன சொல்றாங்க தெரியுமா? "என் வீட்டுக்காரர் லேட்டா பேசுனாரு, சோ அதனாலதான் என் பிள்ளைங்க லேட்டா பேசுறான் போல. ஏன், அம்பானி கூட லேட்டாத்தான் பேசுனாரா மேம்?" அப்படிங்கிறாங்க. இதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க? அதாவது ஸ்பீச் டிலேன்றது ஒரு கவனிக்க வேண்டிய விஷயம். அட்லீஸ்ட் 2 வயசுக்கு 2 வார்த்தை ஆச்சு வந்து இருக்கணும். அது இல்ல அப்படின்னா, கண்டிப்பா குழந்தைகளை எங்ககிட்ட கூட்டிட்டு வாங்க. அவங்களுக்கு ஸ்பீச் தெரப்பில ஸ்பீச் தெரபி ஏதாச்சும் தேவைப்படுமா? இல்ல ஹியரிங் அசெஸ்மென்ட் ஏதாச்சும் பண்ணனுமான்னு பார்க்கலாம். அதை பொறுத்து நம்ம பண்ணுவோம். இது, இப்ப அதிகமா பார்க்கிறோம்ல மேம், அதுக்கு என்ன ரீசனா இருக்கும்னு நினைக்கிறீங்க? இப்ப எல்லாம் நியூக்ளியர் ஃபேமிலி ஆயிடுச்சு, மேம். சோ, வீட்டுல யாரு இருக்கறது இல்ல. தாத்தா, பாட்டியும் கூட இல்ல, அப்பாவும் போன்ல இருக்காங்க. அம்மாவும் சீரியல் பாக்குறாங்க. அப்புறம் அந்த குழந்தை யாருகிட்டதான் மேம் பேசும்? அப்போ மாற வேண்டியது நம்மதானே? குழந்தைங்க கூட நம்மதான் சேர்ந்து விளையாடணும், பேசணும், டைம் ஸ்பென்ட் பண்ணணும். அப்பதான் அவங்க வயதிற்கு ஏற்ற வளர்ச்சி அவங்க அடைவாங்க. அதனால என்ன சொல்ல வரோம்னா, உங்க குழந்தைங்க கூட மேக்ஸிமம் டைம் ஸ்பென்ட் பண்ணுங்க. அதுதான் அவங்களோட டெவலப்மென்டல் ஸ்டிமுலேஷன்.

என் பையனுக்கு அடிக்கடி இருமல், சளி வந்து, அதுக்கு புகை வைக்கிறாங்க. அதுல அவன் அடிக்ட் ஆகிட மாட்டானா? அதுல ஸ்டீராய்ட்ஸ் வேற யூஸ் பண்றேன்னு சொல்றாங்களே. அதுல சைடு எஃபெக்ட்ஸ் எதுவும் இருக்காதா?"ன்னு மதர்ஸ் கேக்குறாங்க, மேம். மதர்ஸ் குழந்தைங்களை நம்மகிட்ட கூட்டிட்டு வரப்போ இருமல், சளினு கூட்டிட்டு வராங்க. நம்ம எக்ஸாமின் பண்றப்போ குழந்தைக்கு வீசிங் இருக்குங்கறது தெரிய வருது. அப்ப நம்ம அவங்களுக்கு நெபுலைசேஷன் தருவோம்.

அதுக்கு ஹாபிட் ஃபார்மிங் ப்ராப்பர்ட்டியோ, அடிக்ஷன் ப்ராப்பர்ட்டியோ எதுவுமே கிடையாது. அதுக்குள்ள தர ஸ்டீராய்ட் டோஸும் ரொம்ப கம்மியா இருக்கறதுனால, அதுக்கு சைடு எஃபக்ட்ஸ் எதுவும் இருக்காது. சோ, அதனால, என்ன சொல்ல வரோம்னா? டாக்டர் அட்வைஸ் படி புகை வைக்கறது ஐடியல்தான். அதுக்காக நீங்க பயப்பட வேண்டாம். அது ஹாபிட்டா மாறாது, அடிக்ட்டும் ஆக மாட்டாங்க.

பாட்டிஸ்லாம் ஓபிக்கு வந்துட்டு, "என் பையனுக்குலாம் தடுப்பூசியே போடலையே. அவன் நல்லா தானே இருக்கான், என் பேரனுக்கு மட்டும் எதுக்கு போடணும்?" அப்படின்னு கேக்குறாங்க. இந்த மாதிரி கேக்குறவங்களுக்கு நாங்க சொல்றது என்னன்னா, வேக்சின் இஸ் மஸ்ட். தடுப்பூசிகள் அத்தியாவசியம். கண்டிப்பா எல்லா குழந்தைக்கு தடுப்பூசி போடணும். வேக்சின் குடுக்குறது மூலமா, அந்த நோய் வரதுக்கான சான்ஸும் ரொம்ப கம்மியா இருக்கும். அப்படியே வந்தாலும் அதோட வீரியம் ரொம்ப கம்மியா இருக்கும். அதனால காம்ப்ளிகேஷன்ஸ் எதுவும் ஆகாது.

இவ்வளவு நம்ம சொல்லியும், ஏன் மேம் தடுப்பூசி போட இவ்வளவு யோசிக்கிறாங்க? ஏன்னா, அந்த வேக்சின் போட்டதுக்கு அப்புறம் கொஞ்சம் குழந்தைகளுக்கு காய்ச்சல் வரும், நை நையான்னு அழுதுகிட்டு இருப்பாங்க, உடம்பு சோர்வா இருப்பாங்க, அதனால அவங்க ரொம்ப வேக்சின் போடறதுக்கு யோசிக்கிறாங்க. பட், இந்த ரியாக்ஷன்ஸ் எல்லாமே குழந்தையோட பாடியோட இம்யூனிட்டி வேலை செய்யுதுன்கறதுக்கான அறிகுறிகள்தான். அதை நினைச்சி நம்ம பயப்பட தேவை இல்ல. சோ, அதுனால, என்ன சொல்ல வரணும்னா, எல்லாரும் வேக்சின் கார்ட் வாங்கிட்டு, அதன்படி வேக்சின் போடுங்க. நாங்க இதுவரைக்கும் உங்க கூட ஷேர் பண்ண தகவல்கள் எல்லாம் உங்களுக்கு பயனுள்ளதாக இருந்திருக்கும்னு நம்புறோம். அதுவரைக்கும் உங்கள்ட்ட இருந்து விடைபெறுவது டாக்டர் ஐஸ்வர்யா, டாக்டர் ஜானகி. நன்றி. வணக்கம்.

**Signature of the Resource Person**

**Signature of the HOD**

Dr. T. BHARATH KUMAR
Regd. No: 75119
PROFESSOR & HEAD
Department of Pediatrics
Sri Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet,
Puducherry-605107.